# தேசபக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:124 ★04.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:124 ★04.09.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் முதன்மை மொழி

## பேரவையில் தனித் தீர்மானம் நிறைவேற்றம்

தமிழை சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மையான நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்றும், உயர் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தும் தமிழில் வழங்கும் கட்டமை ப்பை உருவாக்க வேண்டுமென்றும் சட்டப் பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.மேலும், அரசியலமைப்புச் சட்ட ARTICLE 348(2) மற்றும் ஆட்சி மொழிகள் சட்டம், 1963, பிரிவு 7 ஆகியவற்றின் கீழ் மாநில ஆளுநரால் அனுப்பப்படும் முன்மொழிவுகளின் மீது தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் உரையாற்றினார்.

தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் பேசுகையில், "சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை மொழியாக தமிழை அங்கீகரிக்க வேண்டும். உயிரோடும் உணர்வோடும் ஒன்றிணைந்தது எனக் கருதுகிறோம்; சிறப்புமிக்க தமிழ் மொழியானது ஆட்சி, கல்வி, மாவட்ட நீதிமன்றங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்திலும் தமிழை முதன்மை மொழியாக அறிவிப்பது காலத்தின் கட்டாயம்; மாநி லத்தின் ஆட்சி மொழியை உயர் நீதிமன்ற நடவடிக்கையில் பயன்படுத்த அதிகாரம் வழங்க முடியும்.

நீதிமன்ற தீர்ப்பு மற்றும் உத்தரவுகள் அனைத்தையும் தமிழில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

தமிழில் மனுக்கள், ஆவணங்களை சமர்பிக்க உரிய நடைமுறை உருவாக்கப்பட வேண்டும்.



நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற பணியாளர்களுக்கு சட்டத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக உள்ளது. வழக்கு தொடர்பான வாதங்கள் தமிழில் இருந்தால் எளிதாக புரியும். இந்த கோரிக்கை எந்த மொழிக்கும் எதிரானது அல்ல.

தமிழ் மொழிக்கான சட்ட அங்கீகாரம் கேட்கும் கோரிக்கை. குடியரசுத் தலைவரும், மத்திய அரசும் இதற்கு ஒப்புதல் தர வேண்டும். இப்பேரவை ஒருமனதாக இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்மா ன த்தை நிறைவேற்றி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

இந்தத் தீர்மானம் மீது பல்வேறு கட்சி உறுப்பினர்களும் உரையாற்றிய பின்னர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்ற ப்பட்டது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் டெக்ஸ்ராம்ப்ஸ் (TexRamps Scheme) திட்டத்தின் கீழ் ஜவுளித்துறை மாற்றங்களை முன்னெடுப்பதற்காக மாவட்ட பணிக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

# எச்.ஐ.வி./எய்ட்ஸ் இல்லாத சமூகத்தை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும்- ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை, செப். 4

திருவண்ணாமலை மாவட்டத்தில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், "எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு தீவிர பிரச்சாரம் 3.0" நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (03.09.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி வைத்தார்.





தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் வழிகாட்டுதலுடனும், மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலுடனும், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் இத்தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் 12.09.2026 முதல் 12.10.2026 வரை நடைபெற உள்ளது.


இதையொட்டி நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியர் தலைமையில், எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அப்போது, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் நம்பிக்கை மையங்கள் மூலம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த முழுமையான அடிப்படைத் தகவல்களை அறிந்து கொள்வதுடன், தன்னார்வமாக எச்.ஐ.வி. பரிசோதனை செய்து கொள்ள முன்வருவோம் என உறுதியேற்றனர்.

மேலும், எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்களை அரவணைத்து, அவர்களுக்கு தேவையான சேவைகளைப் பெறுவதில் உறுதுணையாக இருப்பதுடன், அவர்களுக்கு சம உரிமை வழங்கவும், புதிய எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றில்லாத குடும்பம் மற்றும் சமூகத்தை உருவாக்க பாடுபடவும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து, "எச்.ஐ.வி./எய்ட்ஸ் Self Risk Assessment" குறித்த விழிப்புணர்வு பதாகைகளை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார். விஷன் பாரா மெடிக்கல் கல்லூரி மாணவிகள் மற்றும் பீம் நாட்டுப்புறக் கலைக்குழுவினர் பங்கேற்ற விழிப்புணர்வு நடன நிகழ்ச்சியை பார்வையிட்ட ஆட்சியர், கலைஞர்கள் மற்றும் மாணவிகளுக்கு பாராட்டு தெரிவித்தார். பொதுமக்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி பிரச்சாரத்தை ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் என 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, அரசு தொழிற்பயிற்சி நிலையம் வரை நடைபெற்றது.

மேலும், "எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு தீவிர பிரச்சாரம் 3.0" கையெழுத்து இயக்கத்தில் மாவட்ட ஆட்சியர் கையொப்பமிட்டு, இயக்கத்தையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், இணை இயக்குநர் (நலப் பணிகள்) மருத்துவர் கவிதா, மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் வேங்கட்ரமணன், வட்டார போக்குவரத்து அலுவலர் (திருவண்ணாமலை) கருணாநிதி, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு திட்ட மேலாளர் கவிதா திருமலை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் எஸ் ஜெயக்குமார் இ கா பா அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்டத்தின் அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகங்களில் மற்றும் அனைத்து காவல் நிலையங்களிலும் 29 8 2026 அன்று சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம் பழனி தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் மற்றும் துணை காவலர் மற்றும் காவல் துறையினர் தலைமையில் நடைபெற்றது முகாமில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனுக்களை பெறப்பற்று சிறப்பு விசாரணை நடத்தினர்

# திருவண்ணாமலையில் புதிய நிரந்தர ஆதார் சேவா கேந்திரா திறப்பு; ஒரே இடத்தில் அனைத்து ஆதார் சேவைகளும் - மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் திறந்து வைத்தார்

திருவண்ணாமலை, செப்.

திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட வேங்கிக்கால் பூதூர், அண்ணாமலை நகரில், இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) சார்பில் நேரடியாக நிர்வகிக்க ப்படும் புதிய நிரந்தர ஆதார் சேவா கேந்திராவை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த புதிய ஆதார் சேவா கேந்திரா மூலம் பொதுமக்கள் ஒரே இடத்தில் பல்வேறு ஆதார் தொடர்பான சேவைகளை எளிதாகவும், விரைவா கவும் பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.



புதிய ஆதார் பதிவு, ஆதார் விவரங்களில் திருத்தம், பயோமெட்ரிக் புதுப்பித்தல், ஆவணப் புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இங்கு வழங்கப்படுகின்றன. குடியிருப்போர் மற்றும் தகுதியான வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கா ன (NRI) புதிய ஆதார் பதிவு, பெயர், முகவரி, பாலினம், பிறந்த தேதி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களில் திருத்தம் மேற்கொள்ளும் வசதியும் உள்ளது. மேலும்,

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான புதிய ஆதார் பதிவு, குழந்தைகளின் வயதிற்கேற்ப தேவையான பயோமெட்ரிக் புதுப்பித்தல் போன்ற சேவைகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் உரிய ஆவணங்களுடன் குழந்தைகளை அழைத்து வந்து பெறலாம். புகைப்படம்,

கைரேகை, கருவிழிப் பதிவு உள்ளிட்ட பயோமெட்ரிக் விவரங்களை மீண்டும் பதிவு செய்தல் அல்லது புதுப்பித்தல், அடையாளச் சான்று (PoI), முகவரிச் சான்று (PoA) உள்ளிட்ட ஆவணங்களை மறு சரிபார்த்தல் போன்ற சேவைகளும் இம்மையத்தில் வழங்கப்படுகின்றன. மேலும், அதிகாரப்பூர்வ ஆதார் அட்டையை பதிவிறக்கம் செய்து வண்ண அச்சு எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு ஆதார் சேவைகளுக்காக பொதுமக்கள் வெவ்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் குறைவதுடன், அவர்களின் நேரமும் சிரமமும் பெருமளவில் குறையும். வாரத்தில் 7 நாட்களும் செயல்படும்

இந்த நிரந்தர ஆதார் சேவா கேந்திரா வாரத்தில் 7 நாட்களும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை செயல்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, திருவண்ணா மலை மாவட்ட பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான ஆதார் தொடர்பான சேவைகளை புதிய நிரந்தர ஆதார் சேவா கேந்திரா மூலம் எளிதாகப் பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார். இந்நிகழ்வில் UIDAI பெங்களூரு மண்டல அலுவலக இயக்குநர் ராகுல் ஜெயந்த் கார்னர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டை மாவட்டம் வேடந்தாங்கல் கிராமத்தில் சுப்பிரமணி சுவாமி கோயில் பக்தர்கள் கிரிவலம்

இராணிப்பேட்டை மாவட்டம், பாணாவரத்தை அடுத்த





வேடந்தாங்கல் கிராமத்தில் உள்ள வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி கோவிலில்நேற்று ஆவணி மாத கிருத்திகையை முன்னிட்டு சுவாமிக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து பல வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணியசுவாமி பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இதில் சுற்றுவட்டாரபகுதிகளை சேர்ந்த திரளான பக்தர் கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து மாலையில் சிறப்பு அலங்காரத்தில் பல்லக்கில் உற்சவர் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளி மலையை சுற்றி கிரிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அப்போது முருகனின் பக்தி பாடல்களை பாடியவாறு ஏராளமான பக்தர்கள் கிரிவலம் வந்தனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது

# ஸ்ரீதேவி நாகசக்தி கருமாரியம்மன் ஆலயத்தில் 17ஆம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 9ஆம் ஆண்டு தீமிதி திருவிழா

செங்குன்றம், செப்டம்பர் 04:

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி திருவிக தெரு





வில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி நாகசக்தி கருமாரியம்மன் ஆலயத்தில் 17ஆம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 9ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலயநிர்வாகிகள்மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

செங்குன்றம் (நாரவாரி குப்பம்) பேரூராட்சி 5வது வார்டு கவுன்சிலர் தெய்வானைகபிலன், செங்குன்றம் பேரூர் திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஷாம் கார்த்திக், கருப்பு ஸ்ரீதர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு தீமிதி திருவிழா வினை தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர்.

இத்திருவிழாவில் செங்குன்றம் சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# செங்குன்றத்தில் லலிதா ஜுவல்லரியின் 65வது புதிய கிளை திறப்பு விழா

செங்குன்றம், செப்டம்பர் 04:

தென்னிந்தியாவின் முன்னணி நகைக்கடை





நிறுவனமான லலிதா ஜுவல்லரி மார்ட் லிமிடெட் (Lalithaa Jewellery Mart Limited) சென்னை அடுத்த செங்குன்றத்தில் 65வது புதிய கிளைதிறப்பு விழா நடைபெற்றது. லலிதா ஜுவல்லரி நிறுவனத்தின் தலைவரும், மேலாண் இயக்குநருமான டாக்டர் எம். கிரண் குமார், அவரின் குழந்தைகளானபக்தி கிரண், பவ்யா கிரண் மற்றும் மாஸ்டர் ஹீத் கிரண் ஆகியோர் இந்த புதிய ஷோரூமை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

கிரண்குமார் செய்தியாளர்களிடையே உரையாடும் பொழுது, வைரம், தங்கம், வெள்ளி நியாயமான விலையில் விற்பனை செய்து வருவதாகவும், எங்கள் கடையின் எஸ்டிமேட் புகைப்படம் எடுத்துக் கொண்டு, 4 கடை அல்ல 40 கடைகளில் கூட விசாரியுங்கள். எங்கு விலை குறைவாகவும், தரமாகவும் கிடைக்கின்றதோ அங்கு வாங்கிக் கொள்ளுங்கள் என்றும், வரும் மார்ச் மாதத்திற்குள் பல்வேறு கிளைகள் திறக்க இருக்கின்றோம். இதனால் 3000த்திற்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப.. இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட.சந்தைவளாகம்.மாவட்டநூலகம் அருகில் நகர்புற பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளைநட்டார்கள்.உடன்நகரமன்றதலைவர் சுஜாதா வினோத். துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா. நகராட்சி ஆணையாளர் செந்தில் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# NDPS குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 13 வாகனங்கள் பொது ஏலம்



இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே. சிபின், இ.கா.ப., அவர்களின்அறிவுரையின்பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.குணசேகரன், (CCW) அவர்களின் தலைமையில்

இன்று (03.09.2026) நடைபெற்ற பொது ஏலத்தில் NDPS குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 13 இருசக்கர வாகனங்கள் ஏலம் விடப்பட்டன.

# ஆர்.பி. கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தின விழா







செங்குன்றம், செப்டம்பர் 04:

செங்குன்றம் அடுத்த புள்ளிலைன் ஊராட்சியில் அமைந்துள்ள ஆர். பி.கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரியில் உலக ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சி கல்லூரி நிர்வாகி நீதியரசர் கோ.வெங்கடராமன் ஆலோசனையில் கல்லூரி முதல்வர் டாக்டர் மோ.மகாலட்சுமி, துணை முதல்வர் கீதா அரசு ஆகியோர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவரும் ரெட்ஹில்ஸ் நண்பன் இதழ் ஆசிரியருமான நண்பன் எம்.முகம்மது அபுபக்கர், சங்கத் தலைவர் எஸ். ரமேஷ், செயலாளர் எஸ். கோபி, பொருளாளர் எஸ். ஜீலான் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்காக கலந்து கொண்டு கல்லூரி பேராசிரியர்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்தை கூறி விருது வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் கல்லூரி மாணவிகள், ஆசிரியஆசிரியைகள், திரளாக கலந்து கொண்டனர்.

# வடகரை ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா

செங்குன்றம், செப்டம்பர் 04:



மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா ஆன்மீக சேவகர் அருண்குமார் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடை பெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பதிவிளக்கு பூஜை, பூங்கரகம் எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்து நிலை நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர் குழுவினர்கள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீ ஆறுமுகசாமி சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு அன்னதானம்



ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அடுத்த தாஜ்புரா ஸ்ரீ ஆறுமுகசாமி. சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு 18 வது மாதமாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அறக்கட்டளையின் கௌரவத் தலைவரும்,தாஜ்புரா முன்னாள்ஊராட்சி மன்றதலைவருமானம.சேட்டுகலந்து கொண்டு அன்ன தான நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். முன்னதாக ஸ்ரீ ஆறுமுகசாமி சித்தர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து சிறப்பு பூஜை செய்து அன்னதான நிகழ்ச்சி துவங்கப்பட்டது.

இதில் செயல் தலைவர்கள் மோகனவேலு, சிவக்குமார், தலைவர் பா.ஞான சேகரன், செயலாளர் எஸ்.ஆர். பாஸ்கரன், பொருளாளர் த.நந்தகோபால் துணை தலைவர்கள் ம.ரஜினிகாந்த், ஜே.சரவணன், துணைசெயலாளர் கு.கோகுல்நாத், மு.பச்சையப்பன், அமைப்பாளர் எஸ்.தமிழரசன், சுபாஷ், வளர்மதி, லட்சுமி, மலர்க்கொடி, ஜெயந்தி, சரஸ்வதி, சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் பா.ராஜா மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். இதில் சுமார் 1000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## இமானுவேல் சேகரன் நினைவு நாள், தேவர் ஜெயந்தியை முன்னிட்டு

# ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்.31 வரை 163 தடை உத்தரவு

ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்.31 வரை 163 தடை உத்தரவு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு தலைவர்களின் பிறந்தநாள், நினைவுநாள் மற்றும் குருபூஜை நிகழ்வுகளின்போது சட்டம்ஒழுங்கு, பொது அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வகையில் பாரதிய நாகரிக பாதுகாப்புச் சட்டம் (பிஎன்எஸ்எஸ்) பிரிவு 163ன் கீழ் (முந்தைய சட்டப்படி பிரிவு 144) மாவட்ட நிர்வாகத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இமானுவேல் சேகரன் நினைவு நாள் / பிறந்தநாள் மற்றும் தேவர் குருபூஜை நிகழ்வுகளின்போது அதிகளவில் தொண்டர்கள் வாடகை வாகனங்களில் வருவதால் வழித்தடங்களில் இடையூறுகள் மற்றும் சட்டம்ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி செப்.9 முதல் 15 வரையும் அக்.9 அன்றும், அக்.25 முதல் 31 வரையும் மேற்கண்ட தலைவர்களின் பிறந்த நாள், நினைவுநாள் மற்றும் குருபூஜை நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக தொண்டர்களைஏற்றிக்கொண்டு பிற மாவட்டங்களிலிருந்து ராமநாதபுரம் மாவட்டத்துக்குள் வரும் அனைத்து வகையான வாடகை மற்றும் சுற்றுலா வாகனங்கள், ஆம்னி பேருந்துகள், தற்காலிக சிறப்பு அனுமதிபெற்ற வாகனங்கள், சரக்கு வாகனங்கள், டிராக்டர்கள், ஆட்டோக்கள், இருசக்கர வாகனங்கள் நுழைவது தடை செய்யப்படுகிறது. மேலும் செப்.5. முதல் இரண்டு மாத காலத்துக்கு முன் அனுமதியின்றி 5 நபர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுதல், பொதுக்கூட்டம் நடத்துதல் மற்றும் ஊர்வலம் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுகளின்போது ஜோதி எடுத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும் இடத்திலிருந்து ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் மட்டும் மாவட்ட நிர்வாகத்தின் முன் அனுமதியுடன் ஜோதி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

செப்.9 அன்று இமானுவேல் சேகரன் பிறந்தநாளைமுன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் ஜோதி ஓட்டம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட வாகனங்களில் பயணம் செய்வோர் அசல் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனத்தின்




தொடர்புடைய ஆவணங்களைக் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும். பொதுமக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் மாவட்ட நிர்வாகத்தின் தடை உத்தரவுகளை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் நினைவு நாள், குருபூஜை நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்தி மாவட்டத்தில் சட்டம்ஒழுங்கு, பொது அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட மாவட்ட நிர்வாகத்துக்கும் காவல் துறைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் ரூ.35க்கு வெங்காய விற்பனை தொடக்கம்

வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த கிலோ ரூ.35க்கு வெங்காய விற்பனையை அமைச்சர்கள்வெங்கடரமணன்மற்றும்காந்திராஜன் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர். இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக முதல்வரின் அறிவுறுத்தலின் படி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் பொது மக்களுக்கு தரமான வெங்காயம் குறைந்த விலையில் தடையின்றிக் கிடைக்கும் வகையில் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருளான வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க வும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) ஆகியவற்றின் மூலம், முதற்கட்டமாக 1,000 மெட்ரிக் டன் வெங்காயம் மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் இருந்து தமிழ்நாடு அரசால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இன்று (செப்.3) முதல் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம், கிலோ ரூ.35/ என்ற மானிய விலையில் தமிழ்நாடு முழுவதும் வெங்காயம் விற்பனை செய்யப்படும். நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகள், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பண்ணை பசுமைக் கடைகள் உள்ளிட்ட மொத்தம் 8,914 கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வெங்காயம் விற்பனை செய்யப்படும். இதற்கான முதல் விற்பனையை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திரா ஜன் ஆகியோர் சென்னையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் டி.டி.கே. சாலையில் உள்ள நியாய விலைக் கடையில் இன்று தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் செயலாளர் பி.அமுதா மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஜி.லதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் பொதுமக்களுக்கு தரமான வெங்காயம் குறைந்த விலையில் தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படும். நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் இன்று முதல் தங்களுக்குரிய நியாய விலைக் கடைகளை அணுகி, கிலோ ரூ.35/ என்ற மானிய விலையில் வெங்காயத்தைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணிப்பேட்டை மாவட்டத்தில் காலநிலை கல்வி 3 நாள் உறைவிட பயிற்சி நிறைவு

பெருமதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந ப்பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை சார்பில்,

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. ம. மோகனா அவர்கள் வழிகாட்டுதல் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேவி இணைந்து செப்டம்பர் 1, 2, 3 ஆகிய மூன்று நாட்கள் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது.



நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் திரு. K. சிவக்குமார் அவர்கள், ராணிப்பேட்டை வனச்சரக அலுவலர் திரு. சரவண பாபு அவர்கள், பசுமை தோழர் ஆரிஃபா, காலநிலை மாற்றத்துறை திரு. எழில் மற்றும் ஏராளமான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

# இலாஹி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 27ஆம் ஆண்டு விளையாட்டு விழா

செங்குன்றம், செப்டம்பர் 04:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக் குப்பம்) பேரூராட்சி திருவிக தெருவில் அமைந்துள்ள இலாஹி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 27ஆம் ஆண்டு விளையாட்டு விழா பள்ளி தாளாளர் மௌலவி முனைவர் அ.காஜா முயீனுத்தீன் ஜமாலி தலைமையில் நடைபெற்றது.





செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் பிராங்க் டி ரூபன், செங்குன்றம் காவல் ஆய்வாளர் கே.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு மாணாக்கர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்தோங்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் விளையாட்டில் ஆர்வத்தோடு பங்கெடுக்கும் பொழுது, தவறான பாதைக்கு செல்லாமல் வாழ்க்கை ஜெயிக்கக்கூடிய விஷயங்களில் கவனம் செலுத்த முடியுமென்றும், விளையாட்டு மூலம் படிப்பிலும் சாதிக்க முடியும் என்றனர். இந்நிகழ்வில் ரெட்ஹில்ஸ் நண்பன் இதழின் ஆசிரியரும், சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவருமான நண்பன் எம்.முகம்மது அபுபக்கர், மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியைகள், பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஆயக்குடி அடுத்த கணக்கன்பட்டியில் திண்டுக்கல் மாவட்ட பட்டு வளர்ச்சி துறையின் கீழ், பட்டு வளர்ப்பில் வரும் நோய்கள மேலாண்மை செய்வதில் உள்ள தொழில்நுட்ப செயல்முறை குறித்த விளக்க கூட்டம் நடந்தது. இதற்கு ஒட்டன்சத்திரம் சேவை மைய உதயி ஆய்வாளர் பாரதி தலைமை தாங்கினார். மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி பவித்ரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டு வளர்ப்பு மற்றும் மல்பெரி சாகுபடியில் வேர் அழுகல் நோய்க்கான தொழில்நுட்ப விளக்கங்களை அளித்தார். நிகழ்ச்சியில் இளநிலைய ஆய்வாளர்கள் விக்னேஷ், ராஜேஷ்கண்ணா மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# போலி ஆவணம் மூலம் நிலம் அபகரிக்க முயற்சி: நடவடிக்கை கோரி ஆர்ப்பாட்டம்



பழநி,செப்.4

மிடாப்பாடி கிராமத்தில் போலி ஆவணம் மூலம் நிலத்தை அபகரிக்க முயன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, திண்டுக்கல் மாவட்ட மார்க்சிஸ்ட் லெனினிஸ்டு கட்சிசார்பில்பழநிகுளத்து ரவுண்டானா பகுதியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநிலக்குழு உறுப்பினர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் முருகேசன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், பழநி அருகே மிடாப்பாடி கிராமத்தில் கட்சி நிர்வாகிக்கு சொந்தமான நிலத்தை போலி ஆவணங்கள் தயாரித்து அபகரிக்க முயன்றவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.





# உணவு பதப்படுத்தும் துறையில் தொழில்முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கொடைக்கானல், செப்டம்பர் 4

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானலில் "உணவு பதப்படுத்தும் துறையில் தொழில்முனைவோர் வாய்ப்புகள்" என்ற தலைப்பில் தொழில்முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் மதுரை வளர்ச்சி மற்றும் வசதி அலுவலகம் சார்பில், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உயிரித் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.மதுரை கிளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் வளர்ச்சி மற்றும் வசதி அலுவலக உதவி இயக்குநர் திருமதி ஆர். உமாசந்திரிகா வரவேற்புரை வழங்கினார்.

பல்கலைக்கழகப் பொறுப்பு பதிவாளர் முனைவர் பி. ஜெயப்பிரியா தொடக்கவுரை ஆற்றினார். தொழில்நுட்ப அமர்வில் மாவட்ட தொழில் மையத்தின் புலனாய்வாளர் திரு. சங்கர் கணேஷ், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதில் மாவட்ட தொழில் மையத்தின் பங்கு மற்றும் தொழில் தொடங்குவதற்கான பல்வேறு அரசு திட்டங்கள் குறித்து விளக்கினார். தொடர்ந்து, கனரா வங்கி மேலாளர் திரு. கௌதம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான பல்வேறு வங்கிக் கடன் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கான நிதி வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.

கிரசன்ட் புத்தாக்க தொழில் மன்றத்தைச் சேர்ந்த திரு. பி. சரவண பாண்டியன், உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்குத்தேவையான பொருட்களின் சோதனை, தரநிலைகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்து விளக்கினார். மதிய உணவிற்குப் பின்னர் நடைபெற்ற அமர்வில், மதுரை வேளாண் தொழில் அடைகாப்பு மன்றத்தைச் சேர்ந்த திரு. வேம்பு ராஜன், உணவு பதப்படுத்தும் துறையில் பொருட்களுக்கு சிறந்த அடையாளத்தை உருவாக்குதல், சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில் வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், திருமதி ஆர். உமாசந்திரிகா, தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு வழங்கும் ஆதரவுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். இத்திட்டங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். நிகழ்ச்சியின் மூலம் உணவு பதப்படுத்தும் துறையில் தொழில் தொடங்க விரும்பும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள், அரசு திட்டங்கள், வங்கிக் கடன் வசதிகள், பொருட்களின் தரம், சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில் வளர்ச்சி தொடர்பான பயனுள்ள தகவல்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் நிறைவில், உயிரித் தொழில்நுட்பத் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் ஏ. உஷா ராஜா நந்தினி நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# சிறுமி பாலியல் வன்கொடுமை (POCSO) வழக்கில் குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.10,000 / அபராதம்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், கடந்த 17.04.2018 அன்று சிறுமி பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் (POCSO) சம்பந்தப்பட்ட எதிரியான புருஷோத்தமன் (எ) ரஞ்சித் (வ/30) என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.



இவ்வழக்கு இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று (03.09.2026) இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு மாண்புமிகு நீதிபதி அவர்கள், இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில், குற்றவாளி புருஷோத்தமன் (எ) ரஞ்சித் (வ/31) என்பவருக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.10,000/ அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த அரசு வழக்கறிஞர் திரு. V.P.டில்லி, வழக்கின் அப்போதைய விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு, தற்போதைய காவல் ஆய்வாளர் திரு. முரளிதரன், மற்றும் நீதிமன்ற காவலர் PC659 திரு.அருள் ஆகியோரை, இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பே.சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

# இராணிப்பேட்டை புதுப்பட்டு அரசு மேல்நிலை பள்ளியில் கணித மன்ற தொடக்க விழா

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அடுத்த புதுப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் கணித மன்ற தொடக்க விழா நேற்று நடைபெற்றது .

இந்நிகழ்ச்சிக்கு கணித ஆசிரியர் உமாசங்கர் வரவேற்றார்.



இந்த விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் தனஞ்செழியன் தலைமை தாங்கி பேசுகையில், கணிதம் என்பது வெறும் எண்களும் கணக்குகளும் இல்லை.

அது நம் சிந்தனையைச் செம்மைப்படுத்தும் ஒரு மொழி ஆகும்.

மேலும் கணிதம் நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இருந்து வருகிறது.

நாம் அன்றாட வாழ்வில் நேரத்தைப் பார்ப்பது முதல் பணத்தை நிர்வகிப்பது வரை, வீட்டின் அளவை கணக்கிடுவது முதல் விண்வெளியை ஆராய்வது வரை கணிதம் நம்முடன் பயணிக்கிறது. என்றும் மாணவர்கள் மத்தியில் பேசினார்.

இதனையடுத்து கணித மன்றத்தின் சார்பாக கவிதை, நாடகம், நடனம், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதில் விழாவில் உதவி தலைமை ஆசிரியர் கோபிநாதன், ஆசிரியர்கள் கமல் செந்தில் குமார் பாக்கியராஜ் ரஞ்சனி அனுஷா வஞ்சி உமாசங்கர் தனசேகர் எழிலரசி சுரேஷ் விக்னேஷ் பிரமிளா பாக்கிய லட்சுமி அமலா பேபி கிருஷ்ணகுமாரி உட்பட பலர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியின் இறுதியாக கணித ஆசிரியர் வெங்கடேஷ் நன்றி கூறினார்.

# விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, பழநியில் காவல் துறை சார்பில் இந்து அமைப்புகளுடன் ஆலோசனை கூட்டம்

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, பழநியில் காவல் துறை சார்பில் இந்து அமைப்புகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. வரும் செப்.14ம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, பழநி மற்றும் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்து வழிபடுவது வழக்கம். இதன் பின்னர், விநாயகர் சிலைகளை ஊர்வலமாக கொண்டு சென்று சண்முகநதியில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெறும். விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் ஊர்வலத்தை அமைதியான முறையில் நடத்துவது தொடர்பாக பழநி காவல் துறை சார்பில் தனியார் திருமண மண்டபத்தில் ஆலோசனை கூட்டம் நேற்று நடத்தப்பட்டது. இதில், பழநி டிஎஸ்பி தேவராஜ் தலைமை வகித்தார். ஆய்வாளர்கள் தங்கமுனியசாமி, கவிதா, ராஜேஷ் உள்ளிட்டோர்முன்னிலை வகித்தனர். அதில், பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட வேண்டும். சிலைகளை வைக்கும் போது தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டும். மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரிகள் மற்றும் மத வழிபாட்டு தலங்களுக்கு அருகில் சிலைகள் வைக்க கூடாது என்பன உள்ளிட்ட விதிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. இந்து முன்னணி உட்பட பல்வேறு இந்து அமைப்பினர் கலந்து கொண்டனர்.





# மக்கள் நீதிமன்ற முன் அமர்வில் 3 வழக்குகளுக்கு தீர்வு - ரூ.24.51 லட்சம் இழப்பீடு உத்தரவு



ஆரணி, செப். 4

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவின் படியும், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படியும், திருவண்ணாமலை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் ஆரணி வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் மக்கள் நீதிமன்ற முன் அமர்வு நடைபெற்றது.

ஆரணி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிறைவேற்று மனுக்கள் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வு காணும் வகையில் நடைபெற்ற இந்த முன் அமர்வை கூடுதல் மாவட்ட நீதிபதி C. ஜெயஸ்ரீ தொடங்கி வைத்து தலைமையுரையாற்றினார்.

வட்ட சட்டப்பணிகள் குழுத் தலைவரும், சார்பு நீதிபதியுமான S. பாஸ்கரன், மாவட்ட உரிமையியல் நீதிபதி D.V. கோப்பெருந்தேவி, நீதித்துறை நடுவர் M. பிரபுநிவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் பார் அசோசியேஷன் தலைவர், செயலாளர், மூத்த மற்றும் இளம் வழக்கறிஞர்கள், வழக்காடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மக்கள் நீதிமன்ற முன் அமர்வில் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த மொத்தம் 84 நிறைவேற்று மனுக்கள் தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் 3 வழக்குகளுக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டு, மொத்தம் ரூ.24,51,068 மதிப்பிலான தொகைக்கு தீர்வு வழங்கப்பட்டது.

தீர்வு காணப்பட்ட வழக்குகளுக்கான உத்தரவு நகல்களை கூடுதல் மாவட்ட நீதிபதி C. ஜெயஸ்ரீ சம்பந்தப்பட்ட மனுதாரர்களிடம் வழங்கினார்.

# புதுப்பாளையம் ஒன்றிய கலைத் திருவிழா: 341 மாணவர்கள் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தினர்

புதுப்பாளையம், செப்.4–

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியத்தில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் வகையில், “இளையோர் திறன்” என்ற தலைப்பில் ஒன்றிய அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் இன்று (03.09.2026) புதுப்பாளையம் வட்டார வளமையத்தில் நடைபெற்றது.

விழாவை வட்டாரக் கல்வி அலுவலர் ஆறுமுகம் தொடங்கி வைத்து, மாணவர்களின் கலைத் திறன்களை பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

புதுப்பாளையம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் சின்னராஜி தலைமை வகித்து, போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.



அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, பாடல், நடனம், ஓவியம், நாடகம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு கலைப் பிரிவுகளில் தங்களது தனித்திறமை மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தினர்.

கவின் கலை, நுண் கலை, நடனம், தனிநபர் நடிப்பு, பாவனை நடிப்பு, நாட்டுப்புறப் பாடல், பேச்சுப்போட்டி, கதைப் போட்டி, மழலையர் பாடல் ஒப்புவித்தல் மற்றும் திருக்குறள் ஒப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இதில் மொத்தம் 341 மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு முதல் இடம் பெறும் மாணவர்கள், அடுத்தகட்டமாக நடைபெறும் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

மாணவர்களின் கல்வியுடன் அவர்களது கலை, படைப்பாற்றல் மற்றும் தனித்திறன்களை வளர்க்கும் நோக்கில் நடைபெற்ற இக்கலைத் திருவிழா, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இந்நிகழ்வில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் சம்பத், தண்டாயுதபாணி, இந்துமதி, தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், சிறப்பு பயிற்றுநர்கள், வட்டார பொறியாளர், கணக்காளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழா நிறைவில் வட்டார ஒருங்கிணைப்பாளர் ஜம்புகுமார் நன்றி தெரிவித்தார்.

# காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்: முன்னேற்பாடுகளை முழுமையாக நிறைவு செய்ய வேண்டும் - ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

திருவண்ணாமலை, செப்.4

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில், பெருந்தலைவர்காமராஜர் காலை உணவுத் திட்டம் (PKBFS) விரிவாக்கத்திற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (03.09.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய செயல்திட்டங்களில் ஒன்றான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம், தமிழகம் முழுவதும் வரும் 17.09.2026 அன்று விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இதுவரை 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இத்திட்டம், தற்போது 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதையொட்டி நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை, பயிலும் மாணவமாணவியர்களின் எண்ணிக்கை, காலை உணவு தயாரிக்கும் மையங்களின் நிலை, சமையல் கூடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவை குறித்து ஆட்சியர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.



மேலும், சமையல் கூடங்களில் எரிவாயு, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், சமையல் பணியாளர்களின் எண்ணிக்கை, உணவுப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு, உணவு தயாரிக்கும் இடங்களின் தூய்மை, உணவு தயாரித்தல் மற்றும் பள்ளிகளுக்கு பாதுகாப்பான முறையில் கொண்டு சேர்த்தல் உள்ளிட்ட முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரமான, சுத்தமான மற்றும் சுகாதாரமான உணவு உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

மேலும், திட்டம் விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்பாக அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளையும் முழுமையாக நிறைவு செய்ய வேண்டும் என்றும், மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதுடன், பள்ளி வருகை மற்றும் கல்வியில் அவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.10 லட்சம் செலுத்தியும் பறிபோன வாழ்வாதாரம்; 3 மாத தவணை பாக்கிக்காக ஜே.சி.பி. பறிமுதல்

## 10 நாளில் விற்பனை செய்ததாக புகார்; ஆட்சியரிடம் கண்ணீருடன் பெண் மனு

திருவண்ணாமலை, செப்.3:

மாதந்தோறும் தவணை செலுத்தி வந்த நிலையில், வெறும் 3 மாத தவணை பாக்கிக்காக வாழ்வாதாரமாக இருந்த ஜே.சி.பி. எந்திரத்தை தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் பறிமுதல் செய்து, 10 நாட்களுக்குள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி விற்பனை செய்து விட்டதாக பெண் ஒருவர் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம் கண்ணீருடன் புகார் மனு அளித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் அருகே கீழ்கரிப்பூர் கிராமத்தைச் சேர்ந்த தேவி என்பவர், தனது குடும்ப வாழ்வாதாரத்திற்காக தனியார் நிதி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்று ஜே.சி.பி. எந்திரம் ஒன்றை வாங்கியுள்ளார். அந்த எந்திரத்தை இயக்கி கிடைக்கும் வருமானத்தின் மூலம் குடும்பச்செலவுகளைகவனித்து வந்ததாக கூறப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கடனுக்கான மாதத் தவணைகளை முறையாக செலுத்தி வந்த தேவி, இதுவரை சுமார் ரூ.10 லட்சம் வரை கடன் தொகையை திருப்பிச் செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குடும்பத்தில் ஏற்பட்ட திடீர் சூழ்நிலை மற்றும் தொழில் முடக்கம் காரணமாக கடந்த 3 மாதங்களாக தவணைத் தொகையை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, தனியார் நிதி நிறுவனத்தைச் சேர்ந்த



ஊழியர்கள் எவ்வித முன் அறிவிப்பும் வழங்காமல் அவரது ஜே.சி.பி. எந்திரத்தை வலுக்கட்டாயமாக பறிமுதல் செய்து எடுத்துச் சென்றதாக தேவி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜே.சி.பி. பறிமுதல் செய்யப்பட்டு 10 நாட்களே ஆன நிலையில், சட்டப்பூர்வ அறிவிப்போ அல்லது உரிய கால அவகாசமோ வழங்காமல், அந்த எந்திரம் விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக நிதி நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த தேவி, பல ஆண்டுகளாக உழைத்து செலுத்திய ரூ.10 லட்சம் கடன் தொகையும், குடும்பத்தின் ஒரே வாழ்வாதாரமாக இருந்த ஜே.சி.பி. எந்திரமும் ஒரே நேரத்தில் பறிபோய்விட்டதாக வேதனை தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்த தேவி, மாவட்ட ஆட்சியர் மா. சிவகுரு பிரபாகரனை சந்தித்து கண்ணீருடன் கோரிக்கை மனு அளித்தார்.

அந்த மனுவில், தனது ஜே.சி.பி. எந்திரத்தை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்து, பின்னர் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமல் விற்பனை செய்ததாகக் கூறப்படும் தனியார்நிதிநிறுவனத்தின் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனது ஜே.சி.பி. எந்திரத்தை மீட்டுத் தருவதற்கு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தேவி வலியுறுத்தியுள்ளார்.

வாழ்வாதாரத்திற்காக வாங்கிய இயந்திரமே தற்போது கைவிட்ட நிலையில், கடன் தொகையாக செலுத்திய பணமும் திரும்பக் கிடைக்காமல், குடும்பத்தை நடத்த வழியின்றி தவித்து வருவதாக அவர் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

ஜே.சி.பி. பறிமுதல் செய்யப்பட்டு வெறும் 10 நாட்களில் விற்பனை செய்யப்பட்டதாக பெண் ஒருவர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்த சம்பவம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# திண்டுக்கல்லில் 50 பவுன் தங்க நகைகள் மீட்பு - ஒருவர் கைது

திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலைய சரகத்தில், காரின் மேற்கூரையில் வைத்து மறந்து சென்ற 50 பவுன் தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவத்தில், குழந்தைராஜ் (54) என்பவரை போலீசார் கைது செய்தனர். சி.சி.டி.வி. பதிவுகளின் அடிப்படையில் குற்றவாளியை கண்டறிந்த தனிப்படையினர், அவரிடம் விசாரணை மேற்கொண்டதில், 30 பவுன் நகைகளை வங்கியில் அடகு வைத்தது தெரியவந்தது. திருடுபோன 50 பவுன் நகைகளையும் போலீசார் முழுமையாக மீட்டனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார் உத்தரவின் பேரில், காவல் துணைக் கண்காணிப்பாளர் கார்த்திக் மேற்பார்வையில், காவல் ஆய்வாளர்கள் மீனாட்சி மற்றும் ரெய்கானா தலைமையிலான போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வாலாஜா வட்டம், பாரதிநகரில் அமைந்துள்ள கூட்டுறவு நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மலிவு விலையில் தலா 1 கிலோ ரூ.35 வீதம் விற்பனையினை தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன், இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் பிரபாகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் பன்னீர் செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.




மதுரை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., தலைமையில் தொடர்புடைய அலுவலர்களுடன் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். தேவநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் , உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார் இ.ஆ.ப., , உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா இ.ஆ.ப., , மாநகராட்சி துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன் , மாநகர காவல் துணை ஆணையர் (வடக்கு) இ.கார்த்திக் இ.கா.ப., அவர்கள், மாநகர காவல் துணை ஆணையர் (மதுரை தெற்கு) ஏ.ஜி.இனிகோ திவ்யன் , மாநகர காவல் துணை ஆணையர்(போக்குவரத்து) எஸ்.வனிதா ஆகியோர் உடன் உள்ளனர்.

# தாடிக்கொம்பு அருகே இருசக்கர வாகனத்தில் நிலை தடுமாறி கீழே விழுந்து கல்லூரி மாணவர் பலி

திண்டுக்கல் தாடிக்கொம்பு அடுத்த அழகுபட்டி அருகே சென்னம்பட்டியை சேர்ந்த கல்லூரி மாணவர்களான அருண்பாண்டியன்(19), அஜய்(21) ஆகிய 2 பேரும் இரு சக்கர வாகனத்தில்

அகரம் to பாப்பனம்பட்டி ரோடு மேல்கரைப்புதூர் அருகே வந்து கொண்டிருந்தபோது நிலை தடுமாறி கீழே விழுந்து அருண் பாண்டியன் உயிரிழந்தார்.

அஜய் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் குறித்து தாடிக்கொம்பு காவல் நிலைய ஆய்வாளர் சரவணன், சார்பு ஆய்வாளர் கிருஷ்ணவேணி மற்றும் காவலர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றர்



திண்டுக்கல் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தாமரபாடியில் அருகே பேருந்து மோதி ஒருவர் கவலைக்கிடம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் உபை கோயில் ஆன திரு ஆவினன்குடி என்ற குழந்தை வேலாயுத சாமி திருக்கோயிலில் ஆவணி மாதம் கிருத்திகை என்பதால் பக்தர்கள் கூட்டம் அதிக அளவில் உள்ளது

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA